

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



"

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9 788193 796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 35. சங்க இலக்கியதில் வீரம் [நடுகல்]

மா.ஜெ.சசிக்குமார்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

வீரமும் காதலும் நமது தமிழ் மண்ணில் இரு கண்களாய்ப் பார்க்கப்பட்டன. இவற்றின் முலம் சங்கப் பாடல்களில் உள்ள வீரயுகப் பாடல்களின் வாயிலாகப் பல்வேறுபட்ட செய்திகளை அறிகிறேம். போர் என்றாலே பலருக்கு வீரமரணம் என்பதும் தவிர்க்க இயலாதது, அவ்வாறு வீரமரணம் அடைந்த வீரர்களுக்குக் கல்நட்டு, அவர்களைக் கடவுளாக வழிபட்ட மரபும் நம்முடையதே. அங்ஙனமாகிய நடுகல் வழிபாடு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### வீரயுகக்காலம்

வீரக்கற்கள் வீரத்தின் அடையாளமாகவும் இறப்பின் அடையளமாகவும் எழுப்பப்படும் நினைவுக்கற்களாகும். 'வீரக்கல்' எனும் சொல்லிற்கு "வீரத்தின் அடையளமாக அமைக்கப்பட்ட கல்" என்று முனைவர் வெ.கேசவராஜ் அவர்கள் 'தென்னிந்திய நடுகற்கள்' எனும் நூலின் வாயிலாகப் பொருள் சொல்கிறார்.

"இந்திய வீரயுகங்களின் காலத்தை வரையறுப்பது மிகவும் அரிய செயல் என்று இத்துறையில் ஆழ்ந்த ஆய்வினை நிகழ்திய 'சாட்விக்' என்பவர் குறிப்பிட்டுச் சொல்கிறார்". இருப்பினும் தமிழருக்குரிய வீரநிலைக் காலம் என்பது, கிறிஸ்த்து பிறப்பதற்கு முன்பு தொடங்கி கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரை நிலவியது எனக் கூறலாம். இதனால்தான் சங்கஇலக்கியப் பாடல்கள் வீரத்தை மட்டுமே சிறப்பிக்கும் மறக்குடியினரைக் காட்டுகின்றன. சங்கஇலக்கியம் தோன்றுவதற்கு முன்பே தமிழர்க்குரிய 'வீரநிலைக்காலம்' உருப்பெறக் தொடங்கிவிட்டது எனக் கூறலாம்.

## நடுகல் வீரர்க்குரியது

இந்நடுகல் வழிபாடு பற்றியும் வழிபட்ட மரபு பற்றியும் நமது சங்க இலக்கியங்கள் பலபடப் பேசுகின்றன. வெட்சித்திணையின் பகுதிகளில் காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்னும் நடுகல் வணக்கத்தின் ஆறு படிநிலைகளைத் தொல்காப்பியம் இயம்புகின்றது.

இம்மரபு அவர் காலமாகிய கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனத் தெரிகின்றது. அந்நாளில் மாடுகளே பெரும் செல்வமாகக் கருதப்பட்டன. எனவே, பகைவரிடமிருந்து ஆநிரைகளைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டு உயிர் துறந்த கரந்தை வீரர்களுக்கே ஏராளமன கற்கள் நடப்பட்டன என்று உணரலாம். ஆநிரைகள் நாட்டின் பொருளாதார அளவில் பெற்றிருந்த செல்வாக்கை இது குறிக்கிறது. எனவே, நாட்டின் பொருளாதாரத்திற்கு பகைவரால் ஏற்பட்ட தீங்கினின்று காப்பாற்றுவதற்கு உயிர்விட்ட வீரர்களைப் போற்றியது பண்பாடுகளில் ஒன்று.

## போரின் இறப்பு

நோயின் காரணமாக வீரன் ஒருவன் இறப்பதை இழிவாகக் கருதியவன் பழந்தமிழன் அகவாழ்விலும் போரில் இறத்தலே பெருமை என்று தலைவன் வாயிலாக தலைவிக்கு உணர்த்தியதை மாமூலனார்,

"நோய்பால் விளிந்த யாக்கை தழீ
வாள்போழ்ந் தடக்கலும் உயர்தனர் மாதோ"
(புறம்.93)

என்று கூறியுள்ளார். கூற்றம் கொள்ளாமல் பகைப்புல்தில் பிறரால் கொல்லப்பட்டோர் தோற்றவராவர் என்று,

"நோற்றோர் மன்றதாமே கூற்றம்
கோளுற விளியார் பிறர் கொள விளிந்தோர்"
(அகம்.61)

எனும் அடிகளால் அறியலாம். இவற்றின் மூலம் வீரநிலைக் காலத்தில் வீரமரணம் அடைவதை தனது உயிருக்கு மேலாக கருதியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

## நடுகல் அமைப்பு

இவ்வகை நடுகற்களில் வீரனுடையபெயரும் அவனுடைய பெருமையும் எழுதபட்டன என்பதனை,

"நல்லமர்க் கடந்த நானுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்"
(அகம்.67)

என்னும் சான்றாலும், இதுபோன்ற வேறு குறிப்புகளாலும் அறியலாம். இந்நடுகற்கள் வரிசை வரிசையாக அமைந்திருந்தன என்பதை,

"நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரை நிலை நடுகல்" (அகம்.387)

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல்" (ஐங்..352)

என்ற வரிகள் மூலமகவும் அறியலாம்.

நடுகற்கள் அமைந்த இடத்தைச் சுற்றி வேலை நட்டு கேடயங்களையும் நிறுத்திவைத்தனர் என்பதை,

"கிடுகு நிரைத்து எஃகூன்றி
நடுகல்லின் அரண் போல" (பட்டினம்.78-79)

"பீலி சுட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்"
(அகம்.131)

என்ற பகுதிகளாலும் அறியலாம்.

## வழிபாடு

தமிழரின் வழிபாட்டு முறைகளை நாம் வீரத்தின்

அடையாளம் என்றே சொல்லவேண்டும். அதாவது பெருந்தெய்வங்களையே அல்லாமல் வீரக்கற்களை மட்டும் வழிபடும் மக்களையே சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. அம்மக்கள் விரத்திற்கு முக்கியதுவம் கொடுக்கும் மறக்குடியினர் ஆவார். கடம்பன், பறையன், துடியன், பாணன் எனும் குடிகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள் விரக்கற்களைத் தெய்வங்களாக வழிபட்டனர். இம்மக்கள் நாட்டின் எல்லையோரப் பகுதிகளில் குடியிருந்தனர். வேட்டையாடும் தொழிலைக் கொண்ட இவர்கள் தேவையானபோது போர் செய்து வெற்றி பெற்று வீரத்தை நிலைநிறுத்தினர். இவர்களின் சூழலும் வழிபாட்டு முறைகளுமே சங்கஇலக்கியங்களில் வீரக்கற்களைப் வழிபடக் காரணமாக இருந்தது.

## நடுகல்லிற்குப் பூச்சூட்டல்

இந்த நடுகற்களுக்கு மலர் சூட்டுவதும் நமது பண்பாடாக இருந்துள்ளது. வேங்கை மலரையும் கரந்தை மலரையும் சூட்டி வணங்கினர். இந்நடுகற்கள் வரிசை வரிசையாகக் காணப்பட்டன. இந்த நடுகற்களுக்கு மாலைகளும், மயிற்பீலிகளும் சூட்டப்பட்டன என்பதைப் பல சான்றுகளால் அறிகின்றோம். மேலும் கல்லை நட்டு அந்த இடத்தில் துணிப்பந்தலை இட்டனர் என்பதை,

"ஊயரிசை வெறுப்புத் தோன்றிய பெயரே
மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடபிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்சால் பந்தர்க் கண்மிசை யதுவே" (புறம்.260)

எனும் புறப்பாடலில் வழியே அறியமுடிகிறது. வேங்கைப் பூவும் பனந்தோடும் கரந்தைப் பூவும் கொடுத்துச் சூட்டுதல் மரபு என்பதை,

"நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட" (புறம்.261)
"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி

மரல்வகுத்துத் தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிர் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும்" (புறம்.264)

நாளும் வழிபாடும்

நட்டுவைத்த நடுகற்களுக்கு நாள்வைத்துப் பூசனை செய்யும் பழக்கம் நம்மவர்களுக்கு இருந்தது என்பதை,

"சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக் கிவர்ந்த ததர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலி கூட்டும் சுரன்"
(அகம்.289)

என்ற பாடலால் அறியலாம். மேலும் இந்நாடுகற்களை வணங்கும் போது, கள் உகுத்துப் பரவினர் என்பதையும் அறியலாம். அதியமான் இறந்த போது, ஔவையார்,

"இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழும் நாளே
நடுகற் பீலீ சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொல்லே"
(புறம்.232)

என்று கூறி வருந்தியுள்ளார்.

வணங்கும் முறையில் ஒரு பெண்ணொருத்தி தனக்கு நல்ல விருந்தினரும், தன் கணவனுக்கு நல்ல பகையும் வேண்டி நடுகல்லைக் கைதொழுது வணங்கினாள் எனும் செய்தியைப் புறப்பாட்டு கூறுகிறது. நல்ல நாளில் வழிச்செல்லுவோர் அங்கே இருக்கும் நடுகற்களை வணங்கிச் செல்வர் என்ற கருத்தும் பெறப்படுகிறது.

இயற்கை நடுகல் பற்றிய சங்கப் பாடலில், பெண்யானை படுத்தலை ஒத்த குன்றின் பக்கத்திலே பல வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன என்பதையும், அக்கல்லை மஞ்சள்

நீரிட்டுக் கழுவினர் என்பதையும், கரந்தைப் பூவைச் சூடி மகிழ்ந்தனர் என்பதையும்,

"பிடிமடிந் தன்னை குறும்பொறை மருங்கில்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்...
.........................................................................
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண் டார்ப்புச் சூட்டிக் கழற்கால்
இளையர் பதிப் பெயரும் அருஞ்சுரம்"

(அகம்.269)

எனும் பாடலில் அறியலாம்.

## பலியும் வழிபாடும்

இத்தகைய நடுகற்களை தெய்வமாகவே வழிபட்டு நாள்தோறும் பலியிட்டு வணங்குதல் அன்றைய மரபாக இருந்து. மலைபடுகடாம் பெயர்மருங்கறியார் 'கல்லெறிந்து எழுதிய நல்லரை மராஅத்த கடவுள்' என உரைக்கின்றார். இதன் மூலம் கற்கள் கடவுளாகவே கருதப்பட்டன என்பது தெளிவாகிறது.

கற்களில் உரையும் தெய்வத்திற்கு வழிபாடு இயற்றுகையில் துடிகள் முழக்குவதும், தோப்பிக்கள்ளையும் பலியாக வழங்குவதும் மரபு என்பதை உணரலாம்.

"நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பக் கள்ளொடு துரூஉப்பிலி கொடுக்கும்"

(அகம்.35)

என கள் படைத்தைப் பற்றி அகப்பாடல் கூறுகிறது. சிற்றூர்வாழ் மக்கள் தம்மூர்ப் புறத்தே இருந்த நடுகற்களை நன்னீராட்டினர். நெய்கரைக் கொளுவினர் தூபம் எடுத்தனர். அதன் புகை தெருக்களில் கமழ்ந்தது என்பதனை,

"இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி

நன்னி ராட்டி நெய்ந்நரைக் கொளீஇய
மங்குன் மரப்புகை மறுகுடன் கமழும்
அருமுனை இருக்கை" (புறம்.329)

எனும் புறப்பாடலின் வழியே அறியலாம். மறக்குடிப் பிறந்த மக்கள் நெல்லை உகுத்துப் பரவும் கல்லைத் தொழுவதன்றி வேறு தெய்வத்தினை வணங்காத இயல்புடையோவர் என்பதை,

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகத்துப் பரவும் கடவுளும் இலவே"
(புறம்.355)

எனும் அடிகளால் அறியலாம்.

## கருத்துரை

தமிழின் அடையாளமே காதலும் வீரமும் தான். இன்றைக்கு உள்ள அனைத்துமே ஆரம்பக் காலத்தினின்று கடைபிடிக்கப்பட்ட பண்பாடுகளின் எச்சங்களே. அவ்வகையில் வீரயுகத்தில் அனைத்துமே வீரத்திற்காகவே வாழ்ந்து உயர்ந்தார்கள் என்பதும், வீரத்தின் அடையாளங்களாகவே வீரக்கற்கள் இன்னும் நிற்கின்றன என்பதும் நாம் அறியவேண்டியது

இப்பொழுது தமிழ்நாட்டில் வணங்கப்பெறும் பல வீரத்தெய்வங்கள் நடுகல் வழிபாட்டில்லிருந்தே தோன்றியவை எனலாம். சாம்பான், இருளன், சன்னாசி, மதுரைவீரன் போன்ற காவல் தெய்வங்கள் இவ்வகையின என்பதில் ஐயமில்லை.

அந்தத் தெய்வங்கள் வணங்கும் சடங்குகளில் மலர் சூடுவதும், நீரால் கழுவுவதும், துடியும் பறையும் முழங்குவதும், கள்ளும் கறியும் படையல் இடுவதும் என அனைத்தும் நடுகற்களை வணங்கிய முறைகளே என்பதும் நாம் உணர்ந்து அறியவேண்டும்.